**மண்முனைப் பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 10 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் மண்முனைப் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அறவிடப்படவேண்டிய நிலுவை முத்திரை தீர்வையானது ரூபா 2,283,441 தொகை கணிப்பிடப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் அவ் நிலுவைத் காட்டப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படவேண்டிய நிலுவை முத்திரை தீர்வையானது நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அறவிட வேண்டிய கடை வாடகை ரூபா 52,119 தொகை இறுதிக் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது | அறவிட வேண்டிய கடை வாடகை உண்மைத் தொகை கணக்குகளில கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (இ) | தொலைந்த, காணாமல் போன 1610 எண்ணிக்கையான புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடப்பட்டு இறுதி கணக்கறிக்கையில் காட்டப்படவில்லை. | தொலைந்த, காணாமல் போன 1610 எண்ணிக்கையான புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடப்பட்டு இறுதி கணக்கறிக்கையில் கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் வழக்குகளுக்காக ரூபா 73,000 தொகை செலவிடப்பட்டுள்ளது. இருந்தும், இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்ற போதிலும், இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வழக்குகள் தொடர்பாக செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக கணக்குகளில் கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டு வழக்குக்கான சட்டத்தரணி கொடுப்பனவுத் தொகை எமக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்படாமையினால் நிகழத்தக்க பொறுப்பான கணக்குகளில் காட்டப்படவில்லை. |

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### (அ) பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மின்சாரக் கடன்கள் ரூபா 781,370 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கடன் வழங்குனர் ரூபா 1,861,828 மற்றும் மின்சாரம் வினியோகித்த மைக்காக கடன் ரூபா 1,958,630 தொகைகள் 05 வருடங்களுக்கு மேலாக இணங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கெடுப்பனவு செய்யப்பட அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**1.3.5 ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 88,913,757 தொகை பெறுமதியான 06 விடயங்களுக்கு காணி உறுதிகள், நிலையான சொத்து பதிவேடுகள், உரிமைப்பத்திரங்கள், மற்றும் மதிப்பிட்டு அறிக்கைகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பேணப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| அ. | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்மான | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்காக சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், | சபையின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்க ாகவும் வேண்டி தனித் தனி குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் . | ஏற்றுக்கொள்ளப் பட்டது. |

| | |
|---|---|
| அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரை இக்குழுக்களை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 982,263 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,041,101 தொகை இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவைகள்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்ப ட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவைகள்** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வீதவரியும் வரியும்** | 1,900,000 | 1,900,000 | 2,634,760 | - | 1,500,000 | 1,957,592 | 1,957,592 | - |
| **வாடகைகள்** | 1,700,000 | 1,981,100 | 1,572,000 | 409,099 | 5,041,700 | 5,236,400 | 4,798,100 | 438,300 |
| **அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்** | 1,000,000 | 1,000,000 | 1,196,025 | - | 1,125,000 | 1,651,150 | 1,654,900 | - |
| **ஏனைய வருமானம்** | 47,509,927 | 49,545,876 | 49,174,843 | 1,806,120 | 15,176,000 | 17,521,280 | 18,985,007 | - |
| **மொத்தம்** | **52,109,927** | **54,426,976** | **54,577,628** | **2,215,219** | **22,842,700** | **26,366,422** | **27,395,599** | **438,300** |

**2.2.2 வீதவரி**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2010 தொடக்கம் 2019 வரையான ஆண்டு காலப்பகுதியில் தற்காலிக சோலைவரி மாத்திரம் அறவிடப்படுகின்றன. | 5 ஆண்டு காலப்பகுதிற்கு ஒரு முறை யாவது அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினாள் மிள்பதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஆ) | பிரதேச சபை பகுதியில் உள்ள 11 பிரிவுகளில் சொத்து மீதான மதிப்பீட்டு கடந்த 05 ஆண்டு காலமாக வரியின் நிலுவைத் தொகை கணக்கீடப்பட்டு கணக்குகளில் காட்டப்படடிருக்கவில்லை | நிலுவைத் தொகை முறையாக கணக்கீடப்பட்டு கணக்குகளில் காட்டப்படவேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**2.2.3 கடை வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட கடை வாடகை ரூபா 461,218 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகை வருமானம் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஆ) | நகர எழுச்சி கடைத் தொகுதியில் உள்ள 05 கடைகளும் பகிரங்க கேள்வி மனுக் கோரலின் அடிப்படையில் மனுக்கல் கோரப்பட்டு சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பகிரங்க கேள்வி மனுக் கோரலின் அடிப்படையில் வழங்கப்படநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (இ) | குத்தகை ஒப்பந்தத்தின் 6 ஆம் சரத்து மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) உப பிரிவுக்குகமைய, சபையானது குத்தகையாளனிடமிருந்து பிணை ஆவணம் ஒன்றைப் பெற்றிருக்கவில்லை. | குத்தகையாளனிடமிருந்து பிணை ஆவணம் ஒன்றைப் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் தீர்வைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 28,551,114 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | 2019 ஆம் ஆண்டு இறுதிவரைக்குமான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை தீர்வை முழுமையாக பெறுவதற்குநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்படுத்தப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள்<br>1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேணடும். இருந்தம், பிரதேச சபையினால் 08 உபவிதிகள் தொடர்பில் 2012 ஆம் ஆண்டும், 06 உபவிதிகள் தொடர்பில் 2013 ஆம் ஆண்டும் மேலும் 04 உபவிதிகள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டும் தயாரிக்கப்பட்டு சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற் கான | சபையின் உப விதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் மேற் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்<br>-------------------------------------------------<br>வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்<br>-------------------------------------------<br>மீளாய்வாண்டில் சபையினால் 02 இறைச்சி கடைகள் மற்றும் 02 சில்லறைக் கடைகள் ஆகியன நிர்மானிப்பதற்காக மொத்தமாக ரூபா 709,686 தொகைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டபோதிலும், சபையினால் அவற்றை நிர்மானிப்பது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுத்திருக்கவில்லை. | சபையினால் அவற்றை நிர்மானிப்பது தொடர்பாக நடவடிக்கை எதுவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>--------------------------------<br>சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. | அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை மேற்கெள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------

### 3.2.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

--------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ---------------------------------- | ----------- | -------------------------- |
| சபைக்கு சொந்தமான காணிகள் மற்றம் கட்டிடங்களை அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை மேற்கெள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**3.2.2 வாகனங்களின் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் உள்ள 08 வாகனங்களுக்கு மோட்டார் வாகன பதிவுச் சட்டத்தின் படி பதிவுப் புத்தகங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் பயன்பாடு அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சினால் EST-6/TPORT/05/3515 இலக்க 2016.12.29 ம் திகதியிட்ட 30/2016 சுற்று நிருபத்திற்கு இணங்கநடவடிக்கை மேற்கெள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஆ) | 08 வாகனங்களுக்கு போக்குவரத்து அனுமதிப் பத்திரம் (Revenue License) இல்லை. | வாகனங்கள் பயன்பாடு அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சினால் EST-6/TPORT/05/3515 இலக்க 2016.12.29 ம் திகதியிட்ட 30/2016 சுற்று நிருபத்திற்கு இணங்கநடவடிக்கை மேற்கெள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**3.3 பெறுகை**

**3.3.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுற்ருபத்தின் அடிப்படையில் முறையான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |